**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | CC. No.198/2024 | அரசுதரப்பு சாட்சி P.W.5 |
| பெயர் | போத்தியப்பன் | கிராமம் |
| தந்தை பெயர் | சதாசிவம் | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 07.07.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை காமராஜர்புரம் 19ம் வீதியில வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக பணிசெய்கிறேன். 12.07.2023ம் தேதி மாலை 04.00 மணியளவில் புதுக்கோட்டை கிங்ஸ் பேக்கரி அருகே நின்று கொண்டிருந்தேன். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வைமகசர் தயார் செய்தார்கள் . பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.5. நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவ இடத்தில்வைத்து நானும் ஆறுமுகம் என்பவரும் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த போது அதற்கு சாட்சியாக இருந்தபோது தான் கிங்ஸ் பேக்கரி அருகிலேயே

வைத்து அந்த சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/–போத்தியப்பன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**